DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No.15/2024**

அ.சா.1

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | புஷ்பராஜ் | Caste: | |
| Father's Name: | செல்லையா | Calling: | விவசாயம் |
| Village: | செங்கப்படை இருப்பு கே. நெடுங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 60 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.09.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா கே நெடுங்குளத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். சாட்சி இருளாயி என் அத்தை. சாட்சி பெரியசாமி என் மச்சினன். சாட்சி மாணிக்கம் மச்சினன். சாட்சி குப்பத்துராஜா என் தம்பி முறை. ஆஜர் எதிரியை தெரியும். அவர் இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர். கடந்த 08.02.2024 ம் தேதி நெடுங்குளத்தை அடுத்த கலைக்குளம் கிராமத்திற்கு ஆடு மேய்ப்பதற்காக சென்றோம். ஆடு மேய்த்து கொண்டிருந்தபோது நாய்கள் குரைத்தது. நாங்கள் மேய்த்து கொண்டிருந்த ஆடுகள் ஆஜர் எதிரி விவசாயம் செய்யும் சோள கொள்ளைக்குள் ஆடுகள் சென்றுவிட்டன. நான் ஓடிப்போய் விரட்டினேன். அப்போது அங்கிருந்த ஆஜர் எதிரியின் மீனாம்பாள் என்னை பார்த்து சத்தம் போட்டார். நான் இந்த பக்கம் வரமாட்டேன் என்று கூறிவிட்டு ஆடுகளை விரட்டிவிட்டு வந்துவிட்டேன். பின்பு

கலைக்குளம் கண்மாயில் ஆடுகள் தண்ணீர் காட்டிவிட்டு அங்கிருந்த மோட்டார் ரூம் முன்பாக சாப்பிட்டு கொண்டிருந்தோம். மீனாம்பாள் ஆஜர் எதிரிக்கு தகவல் சொல்லி ஆஜர் எதிரி நாங்கள் சாப்பிட்டு கொண்டிருந்த இடத்திற்கு அருகில் வந்து ஏன்டா தேவுடியா மகன்களா ஆடு மேய்க்க வேறு இடமே இல்லையா என்று அசிங்கமாக பேசி பள்ளத் தேவுடியா என்ன செய்கிறேன் பார் என்று அங்கு கிடந்த மூங்கில் கம்பை எடுத்து மாறி மாறி அடித்தார். அதில் எனது இடது கையின் நடுவிரலில் இரத்தக்காயம் ஏற்பட்டது. இடது தோள்பட்டை மற்றும் இடது முழங்காலில் வீக்கக்காயம் ஏற்பட்டது. நான் அலறியதும் எனது அத்தை இருளாயி தடுக்க முற்பட்டபோது அவரையும் இடது முழங்காலில் அடித்து வீக்கக்காயத்தை உண்டுபன்னிவிட்டார். நாங்கள் அலறிய சத்தம் கேட்டதும் பக்கத்தில் ஆடு மேய்த்துகொண்டிருந்த பெரியசாமியும், மாணிக்கமும் ஓடிவரவும், ஆஜர் எதிரி இன்னைக்கு தப்பித்து விட்டீர்கள் அடித்து கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு கம்பை எடுத்துக்கொண்டு ஸ்கூட்டியில் சென்றுவிட்டார். ஓடிவந்த பெரியசாமியும் மாணிக்கமும் குப்பத்துராஜாவுக்கு போன் மூலம் தகவல் சொல்லி மூன்று பேரும் வழிப்போக்கு ஆட்டோவில் எங்கள் இருவரையும் கமுதி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நாங்கள் சிகிச்சையில் இருந்தபோது அன்று இரவு கமுதி போலிசார் வந்து எங்களை விசாரித்தார். எங்களை அடித்து சாதியை சொல்லி திட்டி விரட்டிய ஆஜர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என் கையெழுத்துதான். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1**. எதிரி என்னை அடிக்க பயன்படுத்திய கம்பை அடையாளம்

காட்ட முடியுமா என்றால் முடியும். 5–5.30 அடி உயரமுள்ள மூங்கில் கம்பு. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கம்பை வைத்து எதிரி என்னை அடிக்கவில்லை. இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

இல்லை

Sd/- C. Mohanram

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.15/2024**

அ.சா.2

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | இருளாயி | Caste: | |
| Husband Name: | சொக்கலிங்கம் | Calling: | ஆடு மேய்த்தல் |
| Village: | கே. நெடுங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 70 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.09.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா கே நெடுங்குளத்தில் வசித்து ஆடு மேய்த்து வருகிறேன். நான் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர். சாட்சி புஷ்பராஜ் என் மருமகன் உறவுமுறை. சாட்சிகள் பெரியசாமி, மாணிக்கம் என் கொழுந்தன்கள். சாட்சி குப்பத்துராஜா மருமகன் உறவு முறை. ஆஜர் எதிரியை தெரியும். அவர் இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர். கடந்த வருடம் ஒரு நாள் கலக்குளம் கண்மாயில் நானும் புஷ்பராஜும் ஆடுமேய்த்து கொண்டிருந்தோம். மூன்று புஞ்சை நிலங்களுக்கு அப்பால் எதிரி செந்தூரானின் மனைவி சோள கதிர் அறுவடை செய்து கொண்டிருந்தார். அப்போது கருப்பு நாய் அங்கு வந்தது. அப்போது ஆடுகள் செந்தூரன் மனைவி சோள கதிர் அறுவடை செய்து கொண்டிருந்த தட்டைக்குள் சென்றுவிட்டது. எதிரியின் மனைவி சத்தம் போட்டு கொண்டு வந்தார். புஷ்பராஜ் ஆடுகளை விரட்டிக்கொண்டு முனியப்ப சாமி கோவிலுக்கு

சாப்பிடுவதற்காக வந்தோம். நாங்கள் சாப்பிட்டு கொண்டிருந்தபோது எதிரியின் மனைவி எதிரிக்கு போன் அடித்துவிட்டார். எதிரி சுமார் 2.00 மணியளவில் வந்து புஷ்பராஜ் வைத்திருந்த மூங்கில் கம்பை எடுத்து ஏன்டா பள்ள தேவுடியா மகனே எங்கிருந்து எங்கு வந்து ஆடு மேய்க்கிறாய் என்று சொல்லி அடித்தார். நான் போய் ஏப்பா மாத்திரை திங்கிற மனுச போய் அடிக்கிறாய் என்று கேட்டபோது என்னையும் என்னடி பள்ள முண்டை சத்தம் போடுற என்று சொல்லி என் இடது காலில் அடித்தார். நாங்கள் சத்தம்போடும்போது பெரியசாமியும், மாணிக்கமும் ஓடிவந்தார்கள். எதிரி இன்னைக்கு தப்பித்துவிட்டீர்கள் இன்னொரு நாள் இருக்கு என்று சொல்லிவிட்டு அந்த கம்பை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார். நான் காயம்பட்ட எனது மருமகனை தண்ணீர் அள்ளி வந்து முகத்தை கழுவினேன். போன் செய்து ஆட்டோ வரசெய்து கமுதி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நாங்கள் சிகிச்சையில் இருந்தோம். நாங்கள் இருவரும் 9 நாட்கள் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றோம். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED
UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM
**Spl.Sessions Case No.15/2024**

அ.சா.3

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | பெரியசாமி | Caste: | |
| Father's Name: | முனியாண்டி | Calling: | ஆடு மேய்த்தல் |
| Village: | கே. நெடுங்குளம் | Religion: | |
| Taluk: | கமுதி | Age: | 50 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 19.09.2025

( எதிரி ஆஜர்.)

**முதன்மை விசாரணை**

நான் கமுதி தாலுகா கே நெடுங்குளத்தில் வசித்து ஆடு மேய்த்து வருகிறேன். நான் மற்றும் புஷ்பராஜ், இருளாயி ஆகியோர் இந்து பட்டியல் இனத்தை சேர்ந்த தேவேந்திர குல வேளாளர் சமூகத்தை சேர்ந்தவர்கள். சாட்சி புஷ்பராஜ் என் மச்சான், சாட்சி இருளாயி என் மதனி. சாட்சி மாணிக்கம் என் அண்ணன். சாட்சி குப்பத்துராஜா என் மச்சான். ஆஜர் எதிரியை தெரியும். அவர் இந்து மறவர் சமூகத்தை சார்ந்தவர். கடந்த 08.02.2024 ம் தேதி கலக்குளத்து கண்மாயில் நானும் என்னோடு சேர்ந்து மாணிக்கமும் ஆடு மேய்த்து கொண்டிருந்தோம். கிழக்கு கரையில் இருளாயியும் புஷ்பராஜும் ஆடு மேய்த்து கொண்டிருந்தார்கள். ஹோ ஹோ என்று சத்தம் கேட்டது . எங்க ஆட்டை விட்டுவிட்டு நாங்கள் இருவரும் வர முடியவில்லை. பின்பு 2.30 மணியளவில் ஆடுகளை பத்திக்கொண்டு தண்ணீர் காண்பிப்பதற்காக வந்தபோது புஷ்பராஜும் இருளாயியும் அழுதுகொண்டிருந்தார்கள். நாங்கள் என்ன ஏது என்று கேட்டபோது

செந்தூரான் வந்ததும் சட்டு சட்டு என்று அடித்துவிட்டதாகவும், நாங்கள் வருவதை பார்த்ததும் ஓடிவிட்டதாகவும் சொன்னார்கள். நான் குப்பத்துராஜாவுக்கு போன் செய்து ஆட்டோ வரசெய்து சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். அவர்கள் ஆடுகளை மேய்த்து 6.00 மணிக்கு வீட்டிற்கு பத்திட்டு வந்தோம். பின்பு போலிசார் வந்து சம்பவம் நடந்த இடத்திற்கு அழைத்து சென்று வரைபடம் வரைந்தார்கள். இதுசம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள். மேலே சொன்ன விவரத்தை சொன்னேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

இல்லை

Sd/- C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)